இருந்தால்தானே 24 மணி நேரமும் தண்ணீர் வசதி செய்து கொடுக்கமுடியும்? ஆகவே ஏன் வார்தா கக்கூசைக் கட்டிக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யக் கூடாது? மக்களுக்கு அது பயனுள்ளதாக இருக்கும்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே. வார்தா கக்கூஸ் என்றால் எனக்கும் தெரியும். நானும் காந்தி கிராமத்தில் படித்தவன் தான். வார்தா கக்கூஸ் எப்படி அமைத்துக் கொடுத்தார்கள் என்பது தெரியும். இதுபோன்ற கழிப்பறைகள் நவீன கழிப்பறைகளாக இருக்க முடியாது. சுகாதாரக் கேடுகள் வந்துவிடுகின்றன. ஆகவேதான் அவைகளை மாற்றி, நவீன கழிப்பறைகளாக, நாகரிகத்திற்கு ஏற்ற முறையில் அவைகளையெல்லாம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. பொ. உத்திராபதி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம கழிவறைகள் கட்டுவது சம்பந்தமாக, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும், அதற்கான பொருள்கள் வந்து விட்டன. அவைகளைக் கட்டிய பிறகு. அவைகளை எப்படிப் பராமரிப்பது என்பதுபற்றி அரசு பரிசிலிக்கும் என்று நினைக்கின்றேன். தற்போது பேரூராட்சி, முனிசிபாலிடி மூலமாக இருக்கக்கூடிய கழிவறைகள் எல்லாம், உள்ளே போக முடியாத சூழ்நிலை இருக்கிறது. அந்த அளவுக்கு அவைகள் மோசமாக இருக்கின்றன. ஆனால் தனியார்கள் கட்டுகின்ற கழிப்பறைகள் சுத்தமாக இருக்கின்றன. புதிதாக கிராமங்களிலே கட்டுவதுபோல். நகரங்களிலே கட்டுவதற்கு........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு கிராமத்திலே டேஸ்ட் இருக்குமென்று நினைத்தேன். ஆனால், நகரத்திற்கு வந்து விட்டீர்கள். மூலக்கேள்வி கிராமங்களைப் பற்றியது. எனவே, இதற்கும், அதற்கும் சம்பந்தமில்லை. அடுத்த கேள்வி.

அரசு மருத்துவர்களுக்கு வழங்கப்படும் 'Non-practising Allowance'.

வினா 252—திரு. செ. செம்மலை : மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களுக்கு (Doctors) Non-practising Allowances வழங்கப்பட்டுவருகிறதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே ; தனியாக தொழில் செய்யக்கூடாதென்று தடை செய்யப்பட்ட அரசு மருத்துவர்களுக்கு மட்டும் 'Non-Practising Allowance' வழங்கப்பட்டு வருகிறது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தத் துறையில் பணிபுரியும் டாக்டர்களுக்கு இந்த 'நான் பிராக்டீசிங் அலவன்ஸ்' வழங்கப்பட்டு வருகிறது. இப்போது கொடுக்கப்படும் ' நான்-பிரிக்டிசிங் அலவன்ஸ்'ன் மூலம் அரசுக்கு ஆண்டுக்கு எவ்வளவு செலவு ஆகிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

1983 பிப்ரவரி 12]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தேர்டு பே கமிஷன்'—னின் ரெக்கமன் டேஷன் அடிப்படையில் General line - District Family Welfare, Maternity and Child Health Officers in the grade of Civil Surgeons அவர்களுக்கு தரப்படுகிறது. ஈ. எஸ். ஐ. டாக்டர்களுக்கு தரப் படுகிறது. Principal Training Centres, Madras and Salem. Family Welfare Department அவர்களுக்கு தரப்படுகிறது. Asst. Surgeons in the selection category அவர்களுக்கு தரப்படுகிறது. Civil Surgeons holding sanctioned posts of R.M.O. அவர்களுக்குத் தரப்படுகிறது Asst. Directors, D.M.S., Deputy Directors இவர்களுக்கு தரப்படுகிறது. இவர்களுக்கு எல்லாம் ஆண்டுக்கு 350 ரூபாய் தரப்படுகிறது. D.M.S. F.W. and Deputy Director இவர்களுக்கு 450 ரூபாய் மாதத்திற்கு தரப்படுகிறது. ஒட்டுமொத்தமாக இதற்கு செலவு Total amount of expenditure per year teaching line பொறுத்தவரையில் 13, 36, 980 ரூபாய். General line, non-teaching பொறுத்தவரையில் 2, 29, 800 ரூபாய். Primary Health Centres பொறுத்தவரையில் 18, 94, 500 ரூபாய் 'நான் பிரிக்டிசிங் அலவன்ஸாக, செலவழிக்கப்படுகிறது.

திரு. செ. செம்மலை; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனையில் பணிபுரியும் சில டாக்டர் கள் தனியாக நர்சிங்ஹோம் நடத்துகிறார்கள். அவர்கள் அரசு மருத்துவமனைக்கு வருகிற நோயாளிகளை தங்கள் சொந்த நர்சிங்ஹோம்களுக்கு அழைத்துச்சென்று சிகிச்சை அளித்து பணம் சம்பாதிக்கிறார்கள் என்ற புகார் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா? அப்படி இருப்பின் அதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாக எல்லா மருத்துவர் களையும் சொல்ல முடியாது. சிலர் தனிப்பட்ட முறையில் அப்படி செய்யப்படுவதாக புகார் அரசுக்கு வந்திருக்கிறது. அரசு மருத்துவ மனைக்கு வருகின்ற நோயாளிகளை தங்கள் சொந்த மருத்துவ மனைக்கு அழைத்துச்சென்று சிகிச்சை அளித்து பணம் பெறுகிறார்கள் என்ற குற்றச்சாட்டுகள் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கின்றன. அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் வந்தவுடனே கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்தரவு போட்டிருக்கிறோம். நான் இந்த மன்றத்தின் மூலமாக அவர்களை எச்சரிப்பதற்காக இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு அவர்கள் மேல் கடுமையான நடவடிக்கை எடுக்கப் படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் மக்கள் நல்வாழ்வுத் துறை பொறுப்பை ஏற்று இருந்த போது ஒரு அறிவிப்பை செய்தார்கள். 'நான்-பிராக்டிசிங் அலவன்ஸ்' அதிகமாக கொடுத்து தனியாக தொழில் செய்வதை தடுக்கக்

கூடிய அளவுக்கு ஒரு ஏற்பாட்டை செய்வதாகச் சொன்னாகள். அதுபற்றிய நடவடிக்கை எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு மாநிலங்களில் முழுக்க முழுக்க நான்-பிராக்டீசிங் அலவன்ஸ் கொடுத்து, தனியாக தொழில் செய்வதை தடுக்கக்கூடிய அளவுக்கு கடுமையான உத்தரவு போட்டார்கள். U. P. Government Doctors Restriction of Private Practice Rules, 1978 என்று போட்டார்கள். அதே மாதிரி பீகார் மாநிலத்தில் செய்தார்கள். ஆனால் இன்றைக்கு அது கைவிடப்பட்டது. ஏன் என்றால் இப்போது இருக்கக்கூடிய அந்த 'நான்-பிராக்டீஸ் அலவன்ஸ்' மூலம் மட்டுமே நான் சொன்ன மாதிரி கிட்டத்தட்ட 34 லட்சம் ரூபாய் செலவாகிறது. இப்போது இருக்கக்கூடிய ரெஸ்டிக்டட் அளவுக்கு நான்-பிராக்டீஸ் அலவன்ஸ்' கொடுப்பதன் மூலமாக ஏறத்தாழ 34 லட்ச ரூபாய் செலவு செய்து கொண்டிருக்கிறோம். முழுமையாக 'நான்-பிராக்டீஸ் அலவன்ஸ்' கொடுக்கவேண்டும் என்றால் இன்னும் அதிகமாக செலவு ஆகும். அந்த அளவுக்கு நாம் நிதி நிலையை தயார் செய்து கொள்ளவேண்டும்.

திரு. ஆர். டி. கோபாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குஷ்ட ரோகப் பிரிவில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு அரசு ஏதேனும் விஷேச சலுகை கொடுத்துள்ளதா? ஆம் என்றால் எவ்வளவு கொடுக்கிறது. அதை உயர்த்த அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாதத்திற்கு 200 ரூபாய் அந்தப் பிரிவிலே உள்ளவர்களுக்கு நாம் லெப்ரஸி அலவன்ஸ் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இங்கே இந்தக் கேள்வியைக் கேட்பதன் மூலமாக ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள் தொழு நோய் ஒழிப்புப் பிரிவிலே அந்த மருத்துவர்களுக்கு இப்போது அளிக்கப்படுகிற 200 ரூபாய் என்பதை உயர்த்துவதற்கு உத்தேசம் உண்டா என்று கேட்பதன் மூலமாக கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் தொழுநோய் டாக்டர்களுக்கு அதை உயர்த்தலாமா என்று எண்ணிக்கொண்டிருக்கிறோம். இருந்தாலும்கூட நாம் நிதிநிலைமையைப் பொறுத்து நாம் முடிவு செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம்.

செவிலியர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் வழங்கப்படும் உதவித்தொகை

*வினா எண். 253—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பயிற்சி காலத்தில் செவிலியர்களுக்கு உதவித்தொகை எவ்வளவு கொடுக்கப்படுகிறது?